(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 85 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, மே 06, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0052/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,—வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) விஜயம் மேற்கொண்ட நாடுகளையும்,

(iii) பயணச் சீட்டுக்கள் மற்றும் ஹோட்டல் கட்டணங்கள் என்பவற்றுக்கான செலவுகளுடன் ஒவ்வொரு பயணத்திற்குமான மொத்தச் செலவை வெவ் வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) உடன் சென்ற நபர்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவர்களின் பெயர்களையும் அவர்களுக்காக ஏற்பட்ட செலவுகளை வெவ்வேறாகவும்,

(iii) ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குமான பிரதான காரணத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இதற்காக வரவு செலவுத்திட்டமிடப்பட்ட கொடுப்பனவினையும்,

(ii) அவ்வாறான பயணங்களிற்கு வழங்கப்பட்ட குறைநிரப்புச் செலவினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0983 / '08

2.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) தனியார் மயமாக்கப்பட்ட அரச நிறுவனங்களில் எவையேனும் மீண்டும் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்,

(iii) அவ்வாறு பொறுப்பேற்பதற்கான நோக்கம் யாதென்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி நிறுவனங்கள் பொறுப்பேற்கப்படும் போது இழப்பீடு வழங்கப் படுமா என்பதையும் ,

(ii) ஆமெனில், அவற்றுக்கான இழப்பீட்டை மதிப்பிடுவது எந்த நிறுவனம் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

1113 / '08

3.

கௌரவ ரஞ்ஜித் அலுவிஹாரே,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) கொழும்பு 10, மாளிகாவத்தை , ரஜபொகுண வீதியில் வதியும் திருமதி டபிள்யூ. எல். பி. சிறியாவதியினால் மாளிகாவத்தை புதிய நகரத்தில் அமைந்துள்ள ரஜபொகுண எனும் ஸ்நான கிணறு சுமார் 32 வருட காலமாக பராமரித்து நிருவகிக்கப் படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) வருடாந்தம் வரி செலுத்தி இற்றை வரை இவர் நிருவகித்து வந்த மேற்படி கிணற்றை வேறு பிரிவினருக்குப் பெற்றுத்தருவதற்கு முயற்சிப்பது எக்காரணத் தினால் என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(இ) (i) மேற்படி கிணற்றுக்கு அருகில் புத்தர்சிலைக் கூடமொன்றை அமைக்கும் போது அதை உடைத்து சுமார் 5 இலட்சம் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளன ரென்பதைதயும்,

(ii) மேற்படி இடத்தில் வேறு சமய வழிபாடுகளை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஒன்பது பிள்ளைகளுக்குத் தாயான திருமதி சிறியாவதிக்கு தொடர்ந்தும் மேற்படி கிணற்றை நிருவகிப்பதற்கு ஆவன செய்வதற்குரிய நடவடிக்கை அவர் எடுப்பரா?

(உ) இன்றேல், ஏன்?

1137 / ' 08

4.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள விசேட வீதிக் கருத்திட்டங்களில் வேலை முடிவுறாத வீதிகளுக்கான காணி சுவீகரிப்பு நடைவடிக்கைகள் முழுமையாக நிறைவு பெறாதுள்ள வீதிகள் யாவை என அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குறிப்பிட்ட வீதிகளுக்கு அரச அளவையாளர் நாயகத்தின் வரைபடத்திட்ட இலக்கம் மற்றும் திகதி காணி சுவீகரித்தல் சட்டத்தின் 2 ஆம் வாசகத்தின் பிரகாரம் வெளியிடப்பட்ட திகதி ஆகியவை யாவை என அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட வீதிகளுக்கான அரச அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட பூர்வாங்க வரைபடத்தின் இலக்கம் மற்றும் திகதி யாது;

(ii) இவ்வீதிகள் தொடர்பாக குறிப்பிட்ட சட்டத்தில் 38(அ) துணைப்பிரிவு, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி, அவ்வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் மற்றும் 38(அ) துணைப்பிரிவின் கீழ் வெளியிடப்படாத காணித்துண்டுகள் ஆகியவை யாவை;

(iii) மேற்குறிப்பிட்ட வீதிகள் தொடர்பாக இச்சட்டத்தின் 5ஆம் வாசகம், வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிக்கையின் இலக்கம் மற்றும் திகதி, 5 ஆம் வாசகத்தின் கீழ் வெளியிடப்படாத காணித்துண்டுகள் ஆகியவை யாவை;

(iv) இச்சட்டத்தின் 7ஆம் வாசகம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் மற்றும் திகதி ஆகியவை யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1146 / ’08

5.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008 ஆம் ஆண்டு கொழும்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்த, மற்றும் சத்திர சிகிச்சைக்குள்ளாக்கப்பட வேண்டுமென இனங் காணப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இருதய சத்திர சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) சத்திரசிகிச்சை செய்யப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய எனினும் மருத்துவமனை வசதிகளுக்கமைய 2008 ஆம் ஆண்டில் சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்த முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை வெவ் வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1156 / ’08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண – கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) கமத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமாக இருந்த தலாவ, மல்வானேகம விவசாயப்பண்ணை. தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டுள்ள தென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) ஆமெனில் எந்த அடிப்படையில், எந்த நிறுவனத்திற்கு அல்லது எந்த நபருக்கு மேற்படி பண்ணை வழங்கப்பட்டுள்ளதென்பதையும் ,

(ii) மேற்படி பண்ணையை குறிப்பிட்ட நிறுவனத்திற்கு வழங்கிய போது இருந்த ஒரு வருடத்துக்கான குத்தகை எவ்வளவென்பதையும் ,

(iii) குத்தகைக்கு விடப்பட்ட திகதியிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரை பெறப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும் ,

(iv) நிலையான தொகையொன்று பெறப்பட்டிருப்பின் அது எவ்வள வென்பதையும் ,

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற்படி பண்ணையை குத்தகைக்கு இடும் போது பண்ணைக்குச் சொந்தமாக இருந்த அசையா மற்றும் அசையும் சொத்துக்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி சொத்து எத்தகைய காரியத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட தென்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஈ) (i) மேற்படி பண்ணை எத்தகைய நோக்கத்துக்காக எப்போது தாபிக்கப்பட்ட தென்பதையும்,

(ii) தற்போதைய நிருவாகத்தால் மேற்படி பண்ணை குறிப்பிட்ட நோக்கத்துக்காக பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுசாரா ?

(உ) இன்றேல், ஏன் ?

1161 /'08

7.

கௌரவ காமினீ ஜயவிக்கிரம பெரேரா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையை கலைக்கும்போது நட்டஈடுபெற்றுக் கொண்டு சேவையிலிருந்து விலகாத பதவி வகுதிகளைச் சார்ந்த உதவிப் பணிப்பாளர்கள் / கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் விளைச்சல் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் தொடர்பாக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால், கமத்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு அமைச்சின் செயலாளருக்கும் கமத்தொழில் அதிகாரசபையின் ஒழிப்போனுக் கும் பிரதிகள் சகிதம் வரவு செலவு திட்ட பணிப்பாளர் நாயகத்தை விழித்து DMS/ A மற்றும் L 05 இலக்கமும் 2003.07.03 ஆம் திகதியும் கொண்ட கடிதம் முலம் ஆலோசனை வழங்கப்பட்ட (I) (II) பிரேரணையை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி பிரேரணையை அமுல்படுத்துவதற்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள திட்டம், பிரேரணை யாவையென்பதையும்,

(ii) இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு இயலாமல் போயிருப்பின், அதற்கான காரணம் யாதென்பதையும்

(iii) கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை நடைமுறையில் இருந்தபோது இவ்வுத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள் தற்போதும் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த உத்தியோகத்தர்களை மேற்படி (அ) இல் காட்டப்பட்டுள்ள பிரேரணைக்கேற்ப அரச சேவைக்கு உள்வாங்கிக் கொள்வதற்கு கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களிலுள்ள வெற்றிடங்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி பதவி வகுதிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) மேற்படி உதவிப்பணிப்பாளர்கள் /கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் விளைச்சல் மேம்பாட்டு உத்தியோகத்தர்களை அரச சேவைக்கு உள்வாங்கி மேற்படி பதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0559 / ' 08

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரைக்கும் ஈரானினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவி, மானியம், வாக்குறுதியளிக்கப்பட்டவை ஆகியவற்றின் மொத்த அளவை அவற்றிற்குரிய வட்டி வீதத்துடன் வருடாந்த அடிப்படையிலும்,

(ii) இலங்கைக்கு வழங்கப்பட்ட வேறு ஏதாவது விசேட உதவியையும்,

(iii) அவ்வாறாயின், அதன் திகதி, தொகை ஆகியவற்றையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை இலங்கை ஈரானிற்கு பதிலீடாகத் திருப்பிக் கொடுத்தது என்ன என்பதை வருடாந்த ரீதியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) ஐக்கிய நாடுகள் சபையினால் ஈரான் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு எதிராக ஏதாவது பொருட்களை அவர்களுக்கு நாம் விற்பனை செய்துள்ளோமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) 2001 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரையான காலப்பகுதியின் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் இலங்கைக்கும் ஈரானிற்கும் இடையிலான சென்மதி நிலுவை எவ்வளவு என்பதை அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1138 / ' 08

9.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,- நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) விசேட வீதிக் கருத்திட்டங்களுக்கான காணிகள் சுவீகரித்தல் நடவடிக்கைகள் மிகத்துரிதமாக நடைபெறவேண்டுமென உரிய அமைச்சர், அலுவலர்களுக்கு பணிப்புரை வழங்கியிருப்பினும் இப்பணிகள் பொதுவான சுவீகரித்தல் நடவடிக்கைகள் நடைபெறுவதை விட மெதுவாக இடம்பெறுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இதன் காரணமாக காணி சுவீகரித்தல் நடவடிக்கைகளுக்கென ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள ஆலோசகர்களுக்கு தேவையற்ற மேலதிகச் செலவினம் ஒன்று செய்யவேண்டியுள்ளமை தொடர்பாக மேற் கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) காணி சுவீகரித்தல் மற்றும் மீளளித்தல் அலுவலரான திருமதி ஜயவதீ குடலிகம என்பவருக்கு இவ்விடயம் தொடர்பான கள அனுபவம் பற்றி ஆட்சேர்ப்புக்கு முன்னர் விசாரிக்கப்பட்டதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) அவ்வாறாயின் இவருக்கு உள்ள பதவிக்கு முந்திய கள அனுபவங்கள் யாவை என அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1147 / '08

10.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008 ஆம் ஆண்டு கொழும்பு தெற்கு களுபோவில போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக வந்த மற்றும் சத்திரசிகிச்சைக்கு உள்ளாக்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இருதய சத்திர சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) சத்திரசிகிச்சை செய்யப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டிய எனினும் மருத்துவ மனை வசதிகளுக்கமைய 2008 ஆம் ஆண்டில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்த முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை வெவ் வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1157/ '08

11.

கௌரவ ஆர்.பி.ஏ ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அவற்றுள், மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வாகனங்களுக்காக 2007 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் வழங்கப்பட்ட டீசல் மற்றும் பெற்றோலின் அளவு எவ்வள வென்பதையும்,

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில், பதிவுசெய்யப்பட்டதன் பின்னர் 05 வருடங்கள் கடந்த வாகனங்கள் மற்றும் பதிவின் பின்னர் 05 வருடங்கள் முடிவடையாத வாகனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) மிகவும் மோசமான நிலையிலுள்ள வாகனங்களை பயன்படுத்துகின்ற பொலிஸ் நிலையங்களுக்கு தேவையான வாகனங்களையும் போதியளவு எரி பொருளையும் பெற்றுத்தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0655 / '08

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) துறைமுகங்கள் விமானசேவைகள் அமைச்சிற்காகவும் அவ்வமைச்சுக்குச் சொந்தமான ஏதேனும் கம்பனிக்காகவும் கடந்த 4 வருடங்களாக இற்றை வரையில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினை வருடாந்த அடிப்படையிலும், அலுவலக இடத்திற்காக வாடகைக்கு அமர்த்துவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) இக்காலப்பகுதியில் இவ்வாகனங்களுக்கான எரிபொருளுக்கென செலவிடப் பட்ட மொத்தத் தொகையினை அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் நூற்றுவீதமாகவும்,

(ii) வாடகைக்குப் பெறப்பட்ட அலுவலக இடத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) குத்தகைக்கு கட்டிடம் பெறப்பட்ட காலத்தினையும் அதற்கு வைப்புப்பணமாகச் செலுத்தப்பட்ட முற்பணத்தையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1139 / ' 08

13.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,– நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,– (1)

(அ) நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான மிரிஹான பெரகும் வீதி (பிட்டவேல்ல வீதி) காணியில் அத்துமீறி குடியேறியுள்ள பிரிவொன்றுக்கு கடந்த நாட்களில் காணி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபை யில் அறிவிப்பாரா ?

(ஆ) அதன் கீழ் காணி உறுதிகள் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்ப் பட்டிய லொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற் குறிப்பிட்டவர்கள் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப் பட்டார்களென்பதையும்,

(ii) மேற்படி தெரிவு மேற்கொள்ளப்பட்ட நடைமுறை யாதென்பதையும்,

(iii) 28/சீ, 28/2ரீ ,28/2 ஜீ (பிட்டவேல்ல வீதி, மிரிஹான) ஆம் இலக்கங்களைக் கொண்ட வீடுகளில் வசித்தவர்கள் எக்காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்படி காணி உறுதி வழங்கலுக்கு தெரிவுசெய்யப்படவில்லை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஈ) (i) எச்.ஆர்.சீ. / 6848 / 07,6849 / 07,6850 / 07ஆம் இலக்க முறைப்பாட்டை விசாரணை செய்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்படி வீடுகளில் வசித்தவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொணடுள்ளதா என்பதையும்,

(ii) இது சம்பந்தமாக 2008.10.20 ஆம் திகதிய மனித உரிமைகள் ஆணைக்குழு பணிப்பாளரினால் கையொப்பமிடப்பட்ட கடிதமொன்று கிடைக்கப் பெற்றுள்ளதென்பதையும்,

(iii) மேற்படி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(உ) இன்றேல், ஏன்?

1152 / '08

14.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) ஹோமாகம சியம்பலாகொட ஒளுபட்டால குளம், 16 ஏக்கர் அளவிளான ஒரு தனியார் குளமாக இருந்த போது கமநல அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் படி 1968 ஆம் ஆண்டில் அக்காலத்தின் கொழும்பு மாவட்டச் செயலாரினால் மேற்கொள்ளப்பட்ட அளவைக் கட்டளைக்கமைய பொறுப் பேற்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மு.பி.கொ. 880 திட்டவரைப்படத்தின் படி , பொறுப்பேற்கப்பட்ட பகுதி 12 ஏக்கர் .00 ரூட்ஸ் 38.6 பர்ச்சஸ் ஆக வரைப்படத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள தென்பதையும் ,

(ii) பொறுப்பேற்கப்படாத 4 ஏக்கரில் வீடமைப்பதற்கோ அல்லது வேறு அபிவிருத்தியை மேற்கொள்வதற்கோ இடமளித்தால் அது குளத்தின் இன்றைய நிலைமையை மாற்றி குளம் மாசடைவதற்கான தாக்கத்தை ஏற்படுத்துமென கமநல அமைப்புகளால் பல தடவை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் தெரிவிக்கப்பட்டிருப்பதையும்,

(iii) குளமொன்றுக்கு பாதுகாப்பு பிரதேசம் அவசியமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) அதன் பிரகாரம், குளத்தின் பாதுகாப்புப் பிரதேசத்தை பாதுகாப்பதற்காக அவர் எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

15.

கௌரவ ஆர். பி. ஏ ரணவீர பதிரண,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் தலாவ ஊடாக கெகிராவ வீதியில் தலாவ நகரத்திலிருந்து எப்பாவல நோக்கி புணரமைப்பு செய்யப்பட்ட வீதியின் நீளம் எத்தனை கிலோமீற்றர்கள் என்பதையும்,

(ii) மேற்படி புணரமைப்பு நடவடிக்கைகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி புணரமைப்பு நடவடிக்கைக்கு கிடைத்த கேள்விப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி கேள்விப்பத்திரம் எந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதியின் புணரமைப்பு நடவடிக்கையின் போது திருத்தப் பட்ட மதகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அதற்கான மதிப்பீட்டுத் தொகை யாதென்பதையும்,

(iii) மேற்படி வீதி புணரமைப்பின் போது ABC யை பயன்படுத்தி புணரமைப்பு செய்யவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வீதியின் நீளம் எவ்வளவென்பதையும்,

(iv) மதிப்பீடு செய்யப்பட்ட தூரத்தில் எவ்வளவு தூரம் மேற்படி முறையில் புணரமைக்கப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி பாதை உரிய முறையில் புணரமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) உரிய முறையில் புணரமைக்கப்படவில்லையாயின், மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(உ) புணரமைக்கப்பட்ட மேற்படி பாதையின் சில பகுதிகள் குன்றும் குழியுமாகியுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) இன்றேல்,ஏன்?

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— நுளம்புப்பெருக்க தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நுளம்புப் பெருக்கற் தடுப்புச் சட்டத்தின் 3 ஆம் 5 ஆம் 13 ஆம் மற்றும் 17 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 23 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008 ஆகஸ்ட் மாதம் 22 ஆந் திகதிய 1563 / 31ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

இலங்கை நிலவடிவமைப்புக் கலைஞர்கள் நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்,— மண் பேணல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ,— (450 ஆம் அத்தியாயமான) மண் பேணல் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு அச்சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவதற்காக 2009.04.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்,— மண் பேணல் சட்டத்தின் கீழ் கட்டளை ,— (450 ஆம் அத்தியாயம்) மண் பேணல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008 மே மாதம் 22 ஆம் திகதிய 1550/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*6.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்,— தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் (2) ஆம் உபபிரிவின் (ஏ) மற்றும் (ஐ) ஆம் பந்திகளின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிய 1588/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*7.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*14.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*25.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

26.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

பிரேமதாச கேகொட மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

30.

சமோதா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

31.

கருணா சமாதி ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

32.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

33.

இலங்கை கட்டமைப்புசார் எந்திரவியலாளர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0560 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரைக்கும் இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவி, மானியம், வாக்குறுதியளிக்கப்பட்டவை ஆகிய வற்றின் மொத்த அளவை அவற்றிற்குரிய வட்டி வீதத்துடன் வருடாந்த அடிப்படையிலும்,

(ii) இலங்கைக்கு வழங்கப்பட்ட வேறு ஏதாவது விசேட உதவிகளையும்,

(iii) அவ்வாறாயின், அதன் திகதியையும் தொகையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை இலங்கை இந்தியாவிற்கு பதிலீடாகத் திருப்பிக் கொடுத்தது என்ன என்பதை வருடாந்தரீதியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2001 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரையான காலப்பகுதியின் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையிலான சென்மதி நிலுவை எவ்வளவு என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0561 / ' 08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரைக்கும் சீனாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவி, மானியம், வாக்குறுதியளிக்கப்பட்டவற்றின் மொத்த அளவை அவற்றிற்குரிய வட்டி வீதங்களுடன் வருட வாரியாகவும்,

(ii) இலங்கைக்கு வழங்கப்பட்ட வேறு ஏதாவது விசேட உதவியையும்,

(iii) அவ்வாறாயின், அதன் திகதி, தொகை ஆகியவற்றையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை இலங்கை சீனாவிற்கு பதிலீடாகத் திருப்பிக் கொடுத்தது என்ன என்பதை வருடாந்த ரீதியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2001 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரையான காலப்பகுதியின் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான சென்மதி நிலுவை எவ்வளவு என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1206 / '09

3.

கௌரவ ஆர். பி. எ. ரணவீர பத்திரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) அமைச்சர்களினதும் பணியாளர் குழுவினதும் பாவனைக்காக வாகனங்கள் கூலிக்கு அல்லது வாடகைக்கு பெறப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வாகனங்கள் அவ்வாறு கூலிக்கு அல்லது வாடகைக்கு பெறப்பட்டிருப்பின் 2008 ஆம் ஆண்டில் அமைச்சர்களின் பாவனைக்காக எத்தனை வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதையும்,

(ii) அமைச்சர்களின் பணியாளர் குழுவுக்காக எத்தனை வாகனங்கள் கூலிக்கு அல்லது வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதையும்,

(iii) 2008 ஆம் ஆண்டில் அந்த வாகனங்களுக்காக செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iv) அமைச்சர்கள், மற்றும் பணியாளர் குழுவுக்காக 2008 ஆம் ஆண்டில் எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது எ ன்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அதன்படி, இதற்காக கூலியாக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

கௌரவ அஜித் குமார,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்பொழுது கறுவா பயிரிடப்பட்டுள்ள காணிகளின் அளவும் கறுவா பயிர்ச் செய்கையாளர்களின் எண்ணிக்கையும் எவ்வளவு என்பதை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாகவும்,

(ii) அக்கறுவா பயிர்ச் செய்கையாளர்களுக்கிடையே 2 ஏக்கருக்குக் குறைந்த, 2 ஏக்கருக்குக் கூடிய, 5 ஏக்கருக்குக் கூடிய,10 ஏக்கருக்குக் கூடிய மற்றும் 50 ஏக்கருக்குக் கூடிய காணிகள் என்ற வகையில் பயிர்ச் செய்கையாளர்களால் பயிரிடப்படும் காணிகளின் அளவு எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்,

(iii) இலங்கையில் கறுவாப்பட்டை உரிப்பவர்கள், கறுவா வர்த்தகர்கள் ஆகியோரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் கறுவா ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கையும் அந்நபர்களின் அல்லது நிறுவனங்களின் பெயர்களும் யாவை,

(ii) மேற்படி ஏற்றுமதியாளர்களால் கடந்த 5 ஆண்டுகளில் ஏற்றுமதிச் செய்யப்பட்ட கறுவாவின் அளவு எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?